"நானே (இயேசு) வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"

(யோவான் 14 : 6)

SERVE SAVE SECURE

THE LIVING WAY MINISTRIES

# ஜீவ வழி

Tamil

ஆண்டு சந்தா ரூ 100/-

www.thelivingway.in

Volume 12 I Issue 32 I May 2021

# Editorial Board

*Publication Director*
Pr. Livingston Zechariah

*Chief Editor*
Sis. Bincy Livingston

*Team*
Pr. Joanson Zahariya
Pr. Daniel P.S.
Pr. Biju Koshy
Bro. John K. Alexander
Bro. John P. Antony
Bro. Immanuel Mani
Bro. Balasundaram
Bro. Samuel Raj
Sis. Meena Amuthan
Sis. Sophie Varughese
Sis. Susan Sarah George
Sis. Sharine J.

*Computer Desingning*
Anon Graphix
Chembur

*Printing*
Bhandup Offset

*Publisher*
The Living Way Ministries
Mumbai - 400 078


# உள்ளே


மனம் திறந்து உங்களோடு....................3
கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதல்...4
நல்லதை எழுது.....................................9
வேத வினா.........................................10
கவனத்தை கவரும்
பெண்மணிகள் - 18............................11
எதிர்காலத்தை நாசப்படுத்துகிற
சந்ததியினர்.........................................17
ஜீவ வழி மிஷினெரி ஊழியங்கள்.....19



Hear our new worship song

♫ AAVIYAANAVARE ♫

YouTube

www.youtube.com/livingwayindia

LIVINGWAY MEDIA

LIKE I SHARE I SUBSCRIBE


**For your Offerings & Donations ......**

The Living Way Ministries and
Charitable Trust
A/c. No. 35061155727
(or) Livingston Zechariah
A/c. No. 10870977445
State Bank of India,
Bhandup Branch (0562), Mumbai.
IFS Code : SBIN0000562

## சிந்தனைக்கு

*“அபிஷேகம் என்பது நாம் புறப்படுவதற்காக தரப்பட்ட போர்வாள்”*

# மனம் திறந்து உங்களோடு...



கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னை தனியேயிருக்க விடவில்லை (யோவா 8:29). இயேசுவானவர் தமது சீஷர்களோடு சொன்ன வார்த்தைகள் தான் இது. எவ்வளவு அருமையான அர்த்தம் பொதிந்த வார்த்தைகள்.

பிதாவின் சித்தம் செய்ய தன்னை தானே ஒப்புக் கொடுத்த மனுஷகுமாரன் தான் இயேசு. உலக இரட்சகராக வந்த இயேசுவுக்கு ஒரு உறுதி இருந்தது. என்னை அனுப்பினவர் என்னோடு கூட இருக்கிறார். தன்னை அனுப்பினவருடைய சித்தத்திலிருந்து ஒரு துளியும் விலகாமல் தம்மை அனுப்பினவருடைய சித்தம் செய்தார். அவருடைய வேலையை செய்து முடிப்பதே தன் போஜனம் என்றறிந்திருந்தார் அவர் தமது ஜெபத்தின் மூலமாக பிதாவோடு ஒரு நிரந்தரமான உறவை வைத்திருந்தார்,

தேவனோடு நமக்கிருக்கும் உறவும் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். இயேசு பிதாவோடு நிரந்தரமான ஒரு உறவை வைத்திருந்தது போல நமக்கும் அவரோடு நல்ல உறவு ஏற்பட வேண்டுமானால், பிரியமுள்ளதாக வேண்டுமானால் நாம் ஒரு நிரந்தர உறவு வைத்தவர்களாக இருக்க வேண்டும். அந்த உறவு ஜெபத்தின் மூலமாக, உபவாசத்தின் மூலமாக, ஆராதனையின் மூலமாக நிலைநிறுத்தப்பட வேண்டும். அப்படியாக உறவு ஏற்படுத்திக் கொண்டவர்கள் சொல்லலாம் ‘அவர் என்னை தனியே விடுவதில்லை. அவர்களுக்கு அந்த உறுதி இருக்கும்.

இந்த கொள்ளை நோய், கொரோனா பெருகி வருகின்ற இந்த காலகட்டத்தில் ஒரு தேவ பிள்ளை இந்த உலக வாழ்வு நிரந்தரமல்ல என்று புரிந்து கொள்ள வேண்டும். உலக ஆசைகளுக்கும், மோகங்களுக்காகவும் ஓடினது போதும். இனியும் உங்கள் வாழ்வை வீணடிக்காதீர்கள். இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வர போகிறார். அவர் வரவில் நாம் கைவிட பட்டு போக கூடாது. எப்போதும் கர்த்தருக்கு பிரியமானதையே செய்து முன்னேறுங்கள். கர்த்தருக்கு பிரியமானத்தை செய்கிறவர்களை இந்த உலக வாழ்வில் தனியே இருக்க விட மாட்டார். ஆம். ஜீவ வழி வாசகர்கள் அனைவருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் இருந்து கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ஆமென்.

கிறிஸ்துவில் உங்கள் சகோதரன்
**பாஸ்டர். லிவிங்ஸ்டன் சகரியா.**

+91 93245 59533
pastorzlivingston@gmail.com

# கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதல்

பாஸ்டர். லிவிங்ஸ்டன் சகரியா

கர்த்தருடைய தெரிந்து கொள்ளுதல் என்று சொல்லுவது என்ன?. கர்த்தர் யாரை தெரிந்து கொள்ளுகிறார்?. என்ன விதமான குணங்கள் உள்ளவர்களை கர்த்தர் தெரிந்து கொள்ளுகிறார்? அவர் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்?. எதற்காக தெரிந்து கொள்ளுகிறார்?. கர்த்தருடைய தெரிந்து கொள்ளுதலுக்கும் மனிதனுடைய தெரிந்து கொள்ளுதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இவ்விதமான கேள்விகள் எழும்பினால் ஒருவனுக்கு கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதல் எவ்வாறு இருக்கும் என்று வேதம் நமக்கு கற்று தருகிறது.

மனிதனுடைய தெரிந்து கொள்ளுதலின் அளவு கோல் என்பது தகுதியும், அந்தஸ்த்தும் தான். அதாவது, சொத்து, சுகம், அழகு, படிப்பு என்று பலவிதமான அடிப்படையில் இருக்கும். ஆனால் இங்கே சொல்லப்படுகிற தெரிந்து கொள்ளுதல் என்பதின் அடித்தளம் என்று சொல்வது, ஒரு மனிதனுடைய சிந்தனையில் எழுவதே. அது ஒருவருக்கொருவர் வித்தியாசமாக இருக்கும். எப்படி இருப்பினும் மனிதனுடைய தெரிந்து கொள்ளுதலுக்கும், கர்த்தருடைய தெரிந்து கொள்ளுதலுக்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது.

## 1. கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலில் காணப்படும் பெரிய தனிச்சிறப்பு

ஒரு மனிதன் பிறக்கும் முன்பே கர்த்தர் அவனை தெரிந்துகொள்ளுகிறார் என்பது தான். அதாவது அவனது திறமையையோ அல்லது மனித குணநலன்களையோ அடிப்படையாக கொண்டு அல்ல. உதாரணமாக சொன்னால், எரேமியாவை குறித்து கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாக்கும் முன்பே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளை

இட்டேன். (எரேமி1:5). இன்னும் ஏசாயா சொல்லுகிறான், தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் பெயரை அறிவித்தார் (ஏசா:49:1). இவ்விதம் கர்த்தர் தம் தாசர்களை தெரிந்தெடுத்து இருப்பதை வேதத்தில் அநேக இடங்களில் காணமுடிகிறது. (ஏசா: 43:1, லூக் 1:14).

**2. மனித பார்வையில் ஆகாதவன் என்று முத்திரை குத்தப்பட்டவர்களை கர்த்தர் தெரிந்தெடுக்கிறார்.**

தேவ மனிதனாகிய மோசே பிறந்ததே ஒரு மிகப் பெரிய திட்டத்தை செய்து முடிக்கும்படியாகத்தான். ஆனால் மோசே கர்த்தரிடத்தில், நான் வாக்கு வல்லவன் அல்ல, நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன் (யாத் 4:10)என்று சொல்கிறான்.

தாவீதின் பெற்றோர் தாவீது ஆடுகளை மேய்க்க மட்டும் தான் பிறந்தான் என்று நினைத்தாலும், கர்த்தர் தாவீதை ஒரு இராஜாவாக தான் தெரிந்திருந்தார் (1சாமு : 16:1). புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் போது இயேசுவின் சீடர்கள் எல்லாம் படிப்பறிவு இல்லாதவர்கள் என்று சமுதாயம் முத்திரை குத்தி இருந்தது. ஆனால் அவர்கள் தான் உலகம் முழுவதையும் அசைத்து, கிறித்தவர்கள் என்ற பெயர் வர காரணமானார்கள்.

இப்படி தனிப்பட்ட காரணங்களுக்காக கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுடைய வரலாறு வேதாகமத்தில் சொல்லப்பட்டு இருப்பது நம் மேல் கர்த்தர் வைத்து இருக்கிற திட்டங்கள் குறித்து நாம் சரியாய் புரிந்து கொண்டு செயல்படவேண்டும் என்பதற்காகவே.

**3. அநேக ஜனத்திற்கு இரட்சிப்பை அருள கர்த்தர் தெரிந்து கொண்டவர்கள்.**

பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தரால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் எல்லாம் மிகவும் சாதாரணமான மனிதர்கள் தான். ஆதி:41:42-43 இல் வாசிக்கிறோம். யோசேப்பை பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தை கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன்சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரத்தத்தின் மேல் ஏற்றினான் என்று.

சாதாரணமானவனான யோசேப்பின் வாழ்க்கையில் இது நடைபெற்றிருக்கிறது என்றால், அதன் பிண்ணனியத்தை நாம் பார்க்க வேண்டும். ஒருவேளை அது நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத அளவு ஒரு சரித்திரமாக இருக்கிறது. அநேக நாட்கள் கண்ணீரோடு காத்திருந்து ஜெபித்து, அதன் பலனாக யாக்கோபுக்கும் ராகேலுக்கும் இருந்த நிந்தையை மாற்றி போட்டு பிறந்த முதல் சந்ததி யோசேப்பு. யாக்கோபின் நேசகுமாரன். (ஆதி 30:23,24).

யோசேப்பின் வாழ்க்கையை நாம் மூன்று பகுதிகளாக பிரித்து படிக்க முடிகிறது.

1. யோசேப்பின் பிறப்பு முதல் அவன் எகிப்துக்கு போனது வரை முதல் கட்டமாகும். இது ஒரு தோல்வியின் கால கட்டமாகும்.(ஆதி 30:22 – 37:36).

2. எகிப்திற்கு வந்து சேர்ந்தது முதல் அதிகாரியாக பதவியேற்கும் வரை இரண்டாம் கட்டமாகும். இது ஒரு சோதனையின் கால கட்டமாகும். (ஆதி 39:1 – 41:36).

3. எகிப்துக்கு அதிகாரியானது முதல் மரணம் வரை உள்ளது மூன்றாவது கட்டமாகும். இது அவன் வாழ்வின் வெற்றியின் கால கட்டமாகும். (ஆதி 41:37 – 50:26).

முதலாம் கால கட்டத்தை கடந்து இரண்டாம் கட்டத்தில் வந்த போது கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டதாக யோசேப்பு கருதினான். ஏனெனில் முதலாம் கட்டத்தில் நடந்தது மிகவும் பயங்கரமானது. யாக்கோபு தன் நேசகுமாரன் என்று அளித்த பலவருண அங்கியை தரித்து சகோததரர்களிடம் வந்த போது கிடைத்தது ஆழமான படுகுழியில் தூக்கி எறியப்பட்டான். அடிமையாக விற்கப்பட்டு அடிமையின் உடைதரித்து எகிப்துக்கு வந்து சேருகிறான்.

இரண்டாம் கட்டத்தில் தனது திறமையை வெளிப்படுத்தி இருந்தாலும் அவன் சிறைச்சாலையின் அனுபவத்திற்கு தள்ளப் பட்டான். இவை எல்லாம் ஒரு சொப்பனம் பார்த்ததின் விளைவு. இருப்பினும் அவன் சொப்பனம் கண்டதினால் படுகுழியும் சிறைச்சாலையும் கிடைத்தது என்றாலும் கர்த்தர் இராஜாவுக்கு சொப்பனத்தை காட்டி சிறைச்சாலையில் இருந்து வெளியே கொண்டு வந்தார். ஆம் அருமை தேவ பிள்ளையே, உன்னை

உயர்த்தும் படி சிலருக்கு சொப்பனங்களை கொடுக்கலாம். உன் வாழ்வு என்றைக்கும் தோல்வியல்ல. கர்த்தர் உயர்த்த நினைத்தால் அதற்கு தடையாக யாரும் நிற்க முடியாது.

இரண்டாம் கட்டம் என்ற சோதனையின் கட்டத்தில் இன்னும் மிக பெரிய பாடுகளுக்குள்ளாகத் தான் தள்ளப்பட்டான். இந்த சோதனையின் கட்டத்தை கடந்தவன் வெற்றியின் கட்டம் என்கிற மூன்றாம் கட்டம் காத்திருந்தது. மூன்றாம் கட்டத்திற்குள் வந்தபோதோ இராஜா தன் முத்திரை மோதிரத்தை கழற்றி யோசேப்பின் கையில் போடுவித்தான். இது நடைபெறுவதற்கு கொஞ்சகாலம் காத்திருக்க வேண்டி இருந்தது. கர்த்தர் உங்களை தமது திட்டத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்ற திட்டம் பண்ணி இருந்தால் சில கடின பாதைகள் வரலாம். ஆனால் அதன் முடிவோ மிக பெரிய வெற்றியாகும்.

யோசேப்பின் வாழ்வை பார்க்கும் போது நம் வாழ்விலும் நாம் அடைய வேண்டிய பூரணத்தை அடைவதற்காக சில கட்டங்கள் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம். எனக்கு அன்பானவர்களே, நீங்கள் எந்த கட்டத்தில் இருக்கிறீர்கள்? சிந்தியுங்கள். முதலாம் கட்டம் என்றால் ஒரு சோதனையின் கட்டம் உண்டு என்று புரிந்து கொள்ளுங்கள். இரண்டாம் கட்டமாகிய சோதனையின் கட்டத்தில் இருக்கிறீர்கள் என்றால் சீக்கிரமாக உங்கள் சோதனைகளை பூரணப்படுத்தி கர்த்தர் மூன்றாம் கட்டத்திற்குள் கொண்டு வரப்போகிறார் என்று விசுவாசித்து ஆயத்தப்படுங்கள். ஏனெனில் முத்திரை மோதிரமும், பொன்சரப்பணியும், அங்கியும் அணிந்து கொள்ளப் போகிற மூன்றாம் கட்டம் வந்துவிட்டது.

யோசேப்பு தெரிந்தெடுக்கப்பட்டவன் தான் ஆனாலும் சில கடின பாதைகள் வழியாக போக வேண்டி இருந்தது. ஆனால் அவனை தெரிந்தெடுத்தவர் கர்த்தரானதால் அவர் அவனோடு கூட இருந்தார். ஆகவே தான் போகிற இடமெல்லாம் அவன் காரிய சித்தியுள்ளவனாக இருந்தான். இந்த பாடுகள் எல்லாம் எதற்காக என்ற கேள்விக்கு வேதம் நமக்கு நன்றாய் பதில் சொல்லுகிறது. ஆதி 50:20 சொல்லுகிறது. வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடிய பண்ணினார். என்

அருமை தேவ பிள்ளையே, உங்கள் வாழ்விலும் கட்டம் கட்டமாக பிரச்சனைகள் வந்திருக்கலாம். அப்படியானால் தேவனுக்கு உங்களை குறித்து ஒரு திட்டவட்டமான திட்டம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்களை கர்த்தர் தெரிந்தெடுத்தது அசாத்திய மானவைகளை நடப்பிக்கும் படியாகத் தான்.

முதலாம் கட்டத்தில் யோசேப்பு தகப்பனின் நேசகுமாரன் என்றாலும் எல்லாராலும் வெறுக்கப்பட்டு, இரண்டாம் கட்டம் சிறைச்சாலையில் கைதியாக இருக்கிறான். ஆனால் எப்போதும் சிறைச்சாலையிலேயே அடிமையாக இருக்க கர்த்தர் அனுமதிப்பதில்லை என்பதை நிருபித்து மூன்றாம் கட்டமான வெற்றியின் கட்டத்திற்குள் கொண்டு வந்து எல்லாராலும் மரியாதை செய்யப்பட்டான். அதைப்போலவே உங்களுடைய வாழ்க்கையிலும் தோல்விகள் வந்திருக்கலாம். ஆனால் எப்போதும் தோல்வியே உங்கள் நிலை அல்ல. உங்களை கர்த்தர் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும், அநேகரை உயிரோடே காக்கும்படியும் உங்கள் மேல் கர்த்தருக்கு ஒரு விசேஷித்த திட்டத்தோடு தான் தெரிந்தெடுத்திருக்கிறார். கர்த்தர் உங்கள் கூட இருக்கிறார் என்கிற விசுவாசத்தோடு, கஷ்டத்தின் மத்தியிலும் பொறுமையை காத்துக் கொண்டு, நம்மை தேவன் தெரிந்தெடுத்ததின் முக்கியத்துவத்தை மறந்து விடாமல் முன்னேறி செல்லுங்கள். உங்களை குறித்து தேவனிடத்தில் விசேஷித்த திட்டம் உண்டு என்பதை அறியுங்கள். எந்த கால கட்டத்திலும் அநேகருடைய ஜீவனை இரட்சிக்கும் பாத்திரமாக மாறுங்கள். கர்த்தர் உங்களோடு கூட இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

**For Your Offerings and Donations......**

**The Living Way Ministries and Charitable Trust**

**A/c. No. 35061155727**

**(or) Livingston Zechariah A/c. No. 10870977445**

**State Bank of India, Bhandup Branch (0562), Mumbai.**

**IFS Code : SBIN0000562**

# நல்லதை எழுது



பினு ஜோசப் - வடசேரிக்கர, கேரளா

**Tomorrow is the first blank page of a 365 page book. Write a good one.**

புது வருடம் துவங்கி ஐந்து மாதங்கள் கடந்து விட்டது. 2020 இல் கொரோனா விதைத்த பயம் 2021 லும் தொடர்கிறது. இருப்பினும் நம்மை கர்த்தர் பாதுகாப்பாக வைத்திருப்பதற்க்காக நன்றி சொல்லுவோம்.

ஒரு புதிய நோட்டு புத்தகத்தை போல இந்த வருடம் திறக்கப்பட்டது. அதில் என்ன எழுத வேண்டும் என்று நாம் தீர்மானிப்போம். சிலர் அதன் பக்கங்களில் கிறுக்கி வைப்பார்கள். இன்னும் சிலர் அதன் தாள்களை கிழித்தெறிவர். ஆனால் கொஞ்சம் நபர்கள் நன்றாய் அழகாய் எழுதுவர். அது பிறருக்கு உற்சாகமும், புத்துயிரும் கொடுக்கும். சிலரோ ஒன்றுமே எழுதாமல் தள்ளி வைத்துவிடுவர்.

### விருப்பமில்லாத நாட்கள்

யாரிடமும் சண்டையும் வெறுப்பும் இல்லாமல் அன்போடும் மன்னிக்கும் தன்மையோடும் நண்பர்களை சம்பாதிப்போம். இந்த வாழ்க்கையில் மன்னிக்க முடியாதது என்று ஒன்றுமில்லை. வெறுப்போடு நமது கல்லறைக்கு போககூடாது. அன்பு எல்லா அக்கிரமங்களையும் மறைக்கிறது என்று நீதிமொழிகளில் வாசிக்கிறோம்.

### சோம்பேறித்தனமும் நிர்விசாரமும் விட்டுவிடுவோம்.

சோம்பேறியின் மனது எப்போதும் பிசாசின் தொழிற்சாலை ஆகும். சோம்பேறிகள் எப்போதும் காரணம் சொல்லுகிறவர்களாக இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நொண்டிசாக்கு கண்டு பிடிக்கிறார்கள். இன்று செய்ய வேண்டியதை நாளைக்கு என்று தள்ளி வைக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் நமது வாழ்வின் கடைசி தினம் என்று நினைப்பதை நமது வாழ்வின் வழக்கமாக்கி கொள்வோம்.

### உதவிகளையும் உபகாரங்களையும் மறக்காதே

ஒருவருக்கொருவர் உதவுவது தான் நம் வாழ்வை நிலை நிறுத்துகிறது. எல்லா நாளும் நம்மால் இயன்ற வரை உபகாரம் செய்வோம். உதவுகிறதற்க்கான வரம் கிறிஸ்தவ வாழ்கையின் ஒரு பகுதியாகும். பிரதி உபகாரம் ஆவிக்குரிய நன்மையில் ஒன்றாகும்.

யாங்கல் (Yankel) என்ற ஒரு யூத வியாபாரியின் அனுபவத்தை இப்படியாக சொல்லுகிறான். ஒரு நாள் நாசி தீவிரவாதிகள் அவரை ஒரு குளிர் நிறைந்த இரவு வேளையில் கைது செய்து ஒரு ட்ரெயினில் ஏற்றி எங்கோ கொண்டு போய் நிறுத்திவிட்டார்கள். தன்னோடு கூட இருப்பவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. ஒரே மிகவும் இருட்டாக இருந்தது. தனக்கு அருகில் இருந்து ஒரு முதியவரின் முனகல் சத்தம் கேட்டது. குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த அந்த முதியவரை நான் அருகே சேர்ந்து நெருக்கி உட்கார்ந்து அவரை தடவிக் கொடுத்தேன். அது

அவருக்கு கொஞ்சம் சூடாக இருந்தது. இரவு முடிந்து காலை விடிய ஆரம்பிக்கும் போது நான் கண்ட காட்சி என்னை பிரமிக்க வைத்தது. என்னவென்றால் அந்த ட்ரெயினில் உயிரோடு இருப்பவர்கள் நானும் அந்த பெரியவரும் மட்டும் தான். மீதமுள்ளவர்கள் எல்லாம் குளிரால் விறைத்து மரித்துப் போயிருந்தார்கள். காரணம் என்னவென்றால் தடவி கொடுத்த சூட்டினால் பெரியவரும் நெருக்கி உட்கார்ந்ததால் நானும் குளிரை வென்று உடல் சூடேறினதால் உயிரோடிருக்கிறோம். ஒருவருக்கொருவர் உதவுவோம், வாழ்க்கை நல்லதை எழுதின அர்த்தமுள்ள புத்தகமாகும்.

# வேத வினா

1. அடோனாய்
2. யெகோவா - சிட் ஹேனு
3. யெகோவா - எலோஹிம்
4. யெகோவா - சபாயோத்
5. யெகோவா - ஒசெனு
6. யெகோவா - ரப்பா
7. யெகோவா - சாலோம்
8. யெகோவா - எலியோன்
9. யெகோவா - நிசி
10. யெகோவா -யீரே

பதில்

1. எஜமானன் - ஆண்டவர்
2. யெகோவா நம்முடைய நீதி (எரே23: 6)
3. யெகோவா நம்முடைய தெய்வம் (சங் 95:5, 8,9)
4. சேனைகளின் கர்த்தர் (1சாமு 1:3)
5. கர்த்தர் என்னை உண்டாக்கினவர் (சங் 95:6)
6. நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத் 15:26)
7. கர்த்தர் என் சமாதானம் (நியா 6:24)
8. கர்த்தர் உன்னதமானவர் (சங் 7:17, 99:9 )
9. கர்த்தர் என் கொடி (யாத் 17:15 )
10. கர்த்தர் பார்த்துக் கொள்வார் (ஆதி 22:11)



## கவனத்தை கவரும் பெண்மணிகள் - 18




**சகோதரி. பின்ஸி லிவிங்ஸ்டன்**

மிகுந்த வேதனைகளின் ஊடே கடின வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, ஒரு பூ உதிர்ந்து போவது போல தன் வாழ்வை உதிர்த்துக் கொண்டிருக்க வேண்டிய மகதலேனா மரியாள், கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலம் பெற்றுக்கொண்ட விடுதலையினால் இந்த ஈடு இணையில்லா அன்புக்கு சுதந்திரவாளியானாள். தான் ஒரு போதும் பிரிய முடியாத படி தன் வாழ்வை இயேசுவுக்கு தானாகவே முழுமையாக ஒப்புகொடுத்தாள். அதனால் இவள் இயேசுவை ஒரு நிழல் போல பின்தொடர்ந்தாள்.

பரிசுத்த வேதாகமத்தில் அநேக மரியாள்களை குறித்து சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்களில் மிக முக்கியமான ஒருவளாக இந்த மகதலேனா மரியாள் இருந்தாள்.

### பரிசுத்த வேதத்தில் உள்ள மரியாள்கள்.

1. இயேசுவின் தாயாகிய மரியாள் (மத்: 1:16 )
2. பெத்தானியாவில் இருந்த மரியாள் (லூக்: 10:39)
3. கிலயோப்பவின் மனைவியாகிய மரியாள் (யோ: 19:25)
4. மாற்குவின் தாயாகிய மரியாள் (அப்: 12:12-17)
5. மகதலேனா மரியாள் (லூக்:8:2)
6. ரோமில் வசித்த விசுவாசியான மரியாள் (ரோம :16:6).

மகதலேனா மரியாள் மகதலா என்ற கிராமத்தில் வசித்து வந்தவள். இந்த கிராமம் கலிலேயா கடலுக்கு மேற்கு பக்கமாகவும், திபேரியா பட்டணத்திற்கு வடக்கே மூன்று மைல் தொலைவில் இருந்தது. ஆகவே அந்த கிராமத்தின் பெயரோடு அவள் பெயரும் சேர்த்து அழைக்கப்பட்டாள். அவளுடைய பெற்றோர்கள் யார் யாரென்று குறிப்பிடப்படவில்லை .இருப்பினும் மிகுந்த ஐசுவரியம் உள்ள பெண்மணியாக இருந்தாள் என்று அறிகிறோம். அவள் ஏழு பிசாசு பிடித்திருந்தவள் என்று வேதம் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. ஏழு பிசாசுகளின் தொந்திரவுகளை சகிக்க முடியாதவளாக இருந்தாள். அதனால் தான் அவள் இயேசுவை நேசித்து பிரியாமல் பின் தொடர்ந்தாள். எவ்வளவு போராட்டங்களை நாம் சந்தித்தாலும் இயேசுவை விசுவாசித்தால் அவர் தருகிற விடுதலையின் ஆழமும் மிக பெரியதாக இருக்கும். அந்த விடுதலை தான் மகதலேனா மரியாளை ஒரு இணையில்லாத அன்பிற்கு சொந்தக்காரியாக மாற்றிவிட்டது.

ஆகவே தான் அவள் இயேசுவை ஒரு நிழல் போல பின் தொடர்ந்தாள். யாராலும் பிரிக்க முடியாத அளவு ஒரு காணக்கூடிய அன்பின் பந்தம். நம் இயேசுவின் அன்பு எவ்வளவு இன்பமானது!! அந்த அன்பை அவள் அனுபவித்து அறிந்திருந்தாள்.

விடுதலையை பெற்றுக் கொண்ட மரியாள் செய்தது என்ன? விடுதலை பெற்றுக் கொண்ட நாம் செய்ய வேண்டியது என்ன?

## 1. பொருட்களால் அவள் பணிவிடை செய்தாள் (லூக் : 8:1-3)

மரியாளுக்கு கிடைத்த விடுதலையின் மூலம் கர்த்தருக்கு ஊழியத்தில் பங்கு பெற ஏதுவாயிற்று. அவள் இயேசுவிற்கும் சீஷர்களுக்கும் பணிவிடை செய்தாள். அந்த காலத்தில் விலையேறப்பெற்ற செல்வங்களை காணிக்கைகளாக ஆசாரியர்கள் பெற்றுக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால் பெண்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதை கனமாக எண்ணவில்லை. அதுமட்டுமன்றி அவர்கள் பொது இடங்களில் தங்கள் சொந்த மனைவிகளிடம் கூட பேச மாட்டார்கள். ஆனால் ஆணென்றோ, பெண்ணென்றோ வித்தியாசம் பார்க்காமல் எல்லாருக்கும் ஒரே மாதிரியான விடுதலையையும், அன்பையும் தருவதற்கு நம் கர்த்தராகிய இயேசுவால் மட்டுமே முடிந்தது. அருமை தேவ பிள்ளையே, நீங்கள் இயேசுவால் விடுதலையாக்கப்பட்டவரா? அப்படியானால் கர்த்தருக்கென்று, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுக்க வேண்டியவர்களாக உத்திரவாதம் உடையவர்களாக இருக்கிறீர்கள்.

## 2. இயேசுவுக்கு ஊழியம் செய்து கொண்டு பின்பற்றினாள். (மத் 27:55-56)

இயேசுவுக்கு கொடுத்து ஊழியம் செய்த மரியாளை விட அவரை பின்பற்றின மரியாளை காண முடிகிறது. அவள் தனக்கு கிடைத்த விடுதலையின் நன்மைகளை அநேகருக்கு இயேசுவோடு நடந்து சாட்சியாக சொல்லியிருப்பாள். ஒரு வேளை அவள் போகிற இடங்களில் எல்லாம் தனது சாட்சியினால் அநேக ஸ்திரீகளை இயேசுவை பின்பற்ற செய்து ஒரு தலைவியை போல செயல்பட்டிருப்பாள். எப்படி இருந்தாலும் அவள் அவள் மிக உற்சாகமுள்ளவளாக இருந்தாள்.

மரியாளின் வாழ்க்கை கர்த்தர் நமக்கு தருகிற ஆலோசனையாக இருக்கிறது. ஏனென்றால் இயேசு தம் சீஷர்கள் அழைக்கும் போது தம்மை பின்பற்றி வரும்படி அழைத்தார். ஆனால் எந்த ஒரு அழைப்புமில்லாமல் மரியாள் இயேசுவை அன்பினிமித்தம் பின்பற்றினால் என்றால் நாமும் அவரை அதிகமாக நேசித்து பின்பற்ற

வேண்டும். காரணம் அவர் நமக்களித்த விடுதலையின் அளவு பெரியதாகும். நாம் இயேசுவின் சாட்சிகளாக மாற வேண்டும். நமக்கு கிடைக்கும் தருணங்களில் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். ஒருவருடைய நிர்பந்தத்தினால் அல்ல, அவர் மேல் கொண்ட அன்பினாலே.

### 3. பின்பற்றின ஸ்திரீகள் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்தனர் (லூக் :23:49)

இயேசுவை பின்பற்றின அநேகம் ஸ்திரீகள் இயேசு சிலுவைக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு பாடு அனுபவிப்பதை காண கூடாமல் மாரிலடித்து அழுது கொண்டு திரும்பி போய் விட்டனர். ஆனால் மகதலேனா மரியாளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும் திரும்பிப் போக மனமில்லாமல் அவர் படும் பாடுகளை தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டு இருந்தார்கள் இயேசு தன் ஊழிய காலத்தில் அவருக்கு பணிவிடை செய்த அவளுடைய கரங்கள் அவருக்கு எந்த உதவியும் செய்ய முடியால் இருதயம் நொறுங்கி வேதனையில் தவிக்கிறது. சாதாரண ஒருவருக்கு தாங்கமுடியாத ஒன்று தான் சிலுவை மரணம்.

கிறிஸ்துவோடு நமக்கிருக்கும் மனோபாவம் என்ன? அந்த பாடுகள் நம் உள்ளத்தை உடைக்கவில்லையா? அவர் எதற்காக சிலுவை பாடுகள் ஏற்றுக் கொண்டாரோ அதை நாம் சாட்சியாக அறிவிக்க சில வேலைகளை நாம் செய்ய வேண்டுவதல்லவா? இயேசுவை விட்டு எல்லாரும் ஓடிப் போனாலும் நாம் அவர் பின் செல்லுகிற மனமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### 4. கல்லறை வாசலிலும் மரியாள் இயேசுவை கண்டாள் (லூக் 15:4)

கல்லறைகளிடத்தில் பெண்கள் போவது வழக்கமல்ல. சிலுவை பாடுகளின் காட்சியும், கல்லறைகளிடத்து செல்லுதலும் சாதாரண பெண்களுக்கு பார்த்து சகிக்க முடியாததாகும். அதை எல்லாம் பார்த்த பிறகும் மரியாள் கல்லறை இருக்கும் இடத்திற்கு வந்தாள். அவளுடைய இருதயம் அடுத்த திட்டத்திற்கு வழி காண்கிறதாக இருந்தது. யூத வழக்கத்தின் படி சுகந்தவர்க்கம் பூச வேண்டியது முறைமையாகும். ஆனால் இயேசுவின் வாழ்க்கையே அநேகருக்கு சுகந்தவர்க்கமாக இருந்தது. இந்த முறைமை இயேசுவுக்கு செய்யப்படவில்லை. ஆகவே மரியாள் மிகப் பெரிய திட்டத்தோடு மரியாள் திரும்பி போனாள்.

### 5. சுகந்தவர்க்கம் கொண்டுவர போகிறாள் (மாற்கு :16:1)

இங்கே அநேக கேள்விகள் எழும்பலாம்!! இயேசுவை அடக்கம்

பண்ணின இடமும், அந்த கல்லறையை மூடின கல்லையும் மரியாள் பார்த்திருக்கிறாள். அந்த கல்லை உருட்டி தள்ள இந்த ஸ்திரீகளால் முடியாது என்றும் தெரியும். பின்னர் எதற்காக சுகந்தவர்க்கம் கொண்டுவர போகிறாள்? அது மட்டுமன்றி சுகந்த வர்க்கம் கொண்டு வந்து இயேசுவின் மேல் பூசுவதற்கு அனுமதி கிடைக்குமா?

இதெல்லாம் அவளுக்கு தெரிந்தது தான் என்றாலும் தடைகளை குறித்து அவள் கவலைப்படவே இல்லை. அன்பின் ஆளுகை தடைகளை மறைத்துவிட்டது. பிரியமானவர்களே, நாம் அநேகரும் தடைகளை சுட்டிக் காட்டி நாம் செயல்பட முற்ப்படாதவர்களாகத் தான் இருக்கிறோம். போகிற வழியில் அவர்கள் பேசிக் கொள்கிறார்கள் யார் கல்லை புரட்டிபோடுவார்கள். ஆனால் அவளுடைய அன்பு அவள் இருதயத்திற்கு தைரியம் தந்தது.

அவள் இயேசுவோடு நெருங்க நெருங்க (கல்லறை அருகில்) அவர் தம் தூதனுக்கு கட்டளை இட்டு நிறுத்தி இருந்தார். கல்லை புரட்டுவதற்கு மகதலேனா மரியாளால் முடியாது என்பது அன்பே உருவான இயேசுவுக்கு தெரியும். ஆகவே அவள் இயேசு இருக்கும் இடத்தை நெருங்க நெருங்க அவளது பிரச்சனைகள் அவளுக்கு விடுதலையாக மாறியது. அவளுக்காக தூதர்கள் கல்லை புரட்டி போட்டிருந்தார்கள். அருமையானவர்களே, இயேசுவோடு நெருங்க துவங்கும் போதே உன் வாழ்வில் விடுதலை நடக்க துவங்கிவிடும். உன் வாழ்க்கையில் போராட்டமா? இயேசுவிடம் நெருங்கி வா!! தம்முடைய தூதனை அனுப்பி விடுதலையை தருவார்.

### 6. அதிகாலையில் கல்லறையின் இடத்திற்கு போனாள் (லூக் 24:11)

ஓய்வு நாள் முடிந்தவுடன் அவர்கள் போய் சுகந்தவர்க்கம் வாங்கினார்கள். முந்தின நாள் இயேசுவை கல்லறையில் எங்கே வைத்தார்கள் என்று பார்த்திருந்தாள். ஓய்வு நாளில் ஒரு வேலையும் செய்ய அனுமதிக்க மாட்டார்கள் என்று அறிந்தவள், ஓய்வு நாள் முடிந்த உடனே போய் சுகந்தவர்க்கம் வாங்கினாள். அன்று இரவு அவர்கள் உறங்காமல் தனக்கு அன்பானவரை காண இருட்டோடே புறப்பட்டனர். சூரியன் உதிப்பதற்கு முன்னே அவர்கள் கல்லறையை அடைய வேண்டுமானால் எவ்வளவு நேரமே புறப்பட்டு இருக்க வேண்டும்.

இந்த பயணத்தில் அவளுக்கு வேறு எந்த சிந்தனையும் இருந்திருக்கவில்லை. காவல்காரர்கள் உள்ளே அனுமதிப்பார்களா என்ற சந்தேகமில்லை. யாராவது தன்னை துன்புறுத்துவார்களா என்ற

பயமுமில்லை. தங்களது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்ன சொல்லுவார்கள் என்ற சிந்தையுமில்லை. அங்கே நடக்கிற கலவரங்களினால் அவர்கள் மேல் குற்றம் சுமத்தப்படுமோ என்ற பயமுமில்லை. அவர்கள் எல்லா தடைகளையும் கடந்து கல்லறையின் அருகில் வந்து சேர்ந்தார்கள்.

## 7. அவள் இயேசுவின் சரீரத்தை கேட்கிறாள் (யோவா 20:15)

ஒரு பெண்ணின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை தான் இங்கே சிந்திக்க வேண்டி இருக்கிறது. அவள் எல்லா தடைகளையும் கடந்து கல்லறையின் அருகில் வந்து சேர்ந்தாள். அவள் கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்த போது ஓய்வு நாளுக்கு முன் அங்கே வைத்த சரீரம் அங்கே இல்லை. அவள் மிகுந்த துக்கத்தோடு கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்கும் போது, இயேசுவுக்காக காத்திருந்த மரியாளுக்கு முதலில் தரிசனமானார். சுகந்தவர்க்கம் பூசும்படி வந்த மரியாளுக்கு சுகந்தமாக இயேசு தரிசனமானார். இயேசுவுக்காக தந்து முழு அன்பையும் கொடுத்த மரியாளுக்கு இயேசு மூன்றாம் நாள் அவளுக்கு முதலில் தரிசனமானார். மற்றவர்களுக்கு தனது உயிர்த்தெழுந்த சரீரத்தை காட்டுவதற்கு முன் தன்னை அதிகமாக நேசித்த மரியாளுக்கு தரிசனமானார்.

அன்பானவர்களே, அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது என்ற வசனத்தை இது உறுதிப்படுத்துகிறது. உலகமெங்கும் உள்ள எல்லா விசுவாசிகளுக்கும் முன்னே இயேசுவை காணவும், அவரை சாட்சியாக சொல்லவும் வாய்ப்பு அவளுக்கு தான் கிடைத்தது. மற்ற எதை காட்டிலும் அதிகமாக இயேசுவை நேசித்ததால் வேறே யாருக்கும் கிடைக்காத பாக்கியம் அவளுக்கு கிடைத்தது. மரியாள் தான் சுவிசேஷத்தின் முதல் சாட்சி.

நம்முடைய வாழ்க்கையிலும் மரியாளின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அநேக விஷயங்கள் இருக்கிறது. விடுதலை பெற்றுக்கொண்டவர்கள் அவரை விட்டு பிரியாமல் அவரை பின் தொடர வேண்டும். நமக்குள்ள ஆஸ்தி மூலம் கர்த்தருடைய ஊழியத்திற்கு செலவு செய்ய வேண்டும். நிழல் போல பின் தொடர்ந்து தடைகளை தகர்த்து பின்னுக்கு தள்ளி முன்னேறி செல்ல வேண்டும். சூழ்நிலைகள் பின்னுக்கு இழுக்க செய்யும். தடைகளை பெரிதாக எண்ணக் கூடாது. இயேசுவை கண்ட மரியாள் ஓடிப் போய் சீஷர்களுக்கு அறிவித்தது போல நாமும் சுவிசேஷத்திற்கு சாட்சிகளாக ஓடுவோம். அநேகரை இயேசுவின் அருகில் வழி நடத்துவோம். கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

# எதிர்காலத்தை நாசப்படுத்துகிற சந்ததியினர்



ஜே. பி. வெண்ணிக்குளம்

சூசன் (கற்பனை பெயர்) இன்ஜினீயரிங் படிப்பதற்காக பெங்களூர் வந்து சேர்ந்தாள். எல்லோரிடத்திலும் மிக சகஜமாக பழகும் சூசனுக்கு நண்பர்கள் கிடைப்பது மிக எளிதாகவே இருந்தது. அவள் படிப்பில் கெட்டிக்காரியானதினால் அவளுக்கு படிப்புக்கான எல்லா வழிகளும் சுலபமாகவே அமைந்தது. மிக சந்தோசமாக இருந்தாள். அவள் தன் ஊரில் இருந்த போது ஒரு ஆராதனையையோ, ஞாயிறு பள்ளியையோ அவள் தவறினதில்லை. அவளது குடும்பம் நல்ல ஆவிக்குரிய வாழ்க்கை வாழுகிற குடும்பம்.

சூசனுக்கு பெண் தோழிகளை விட ஆண் நண்பர்கள் தான் அதிகம். ஆனால் யாரிடமும் எல்லை மீறி பழகினதில்லை. கல்லூரி துவங்கியது. தங்க ஒரு நல்ல அறையும் கிடைத்தது. சில நண்பர்களும் கிடைத்தனர். இப்படி இருக்க அவளுடைய முகநூலில் ஒரு நட்பு அனுமதி கேட்கப்பட்டது. அவன் நல்ல அழகான ஒரு வாலிபன். அவள் அதை ஏற்றுக் கொண்டாள். உரையாடல்கள் துவங்கியது. அவளுக்கு பின்னர் தான் தெரிந்தது அவன் இந்த கல்லூரியிலேயே வேலை செய்யும் ஒரு ஆசிரியர் என்று. நேரில் சந்தித்து அறிமுகமாகி கொண்டாள். இருவரும் எங்கும் போகவும் வரவும் சாப்பிடவும் துவங்கினர். நேற்று வரை இருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் மறந்து சிறகடித்தது பறக்க ஆரம்பித்தாள். அவர்களது நட்பு காதலாக மாறியது. காதலால் படிப்பில் மிகவும் பின் தங்கி போனாள். அந்த ஆசிரியரின் நிர்பந்தத்தால் ஹாஸ்டலை விட்டு வெளியேறினாள்.அந்த ஆசிரியரின் வீட்டுக்கு பக்கத்திலேயே அறை எடுத்துக் கொண்டாள். அவர்களுடைய நெருக்கம் இன்னும் அதிகமானது. அவன் திருமணமாகாதவன் ஆனதால் எப்பொழுதும் அவளுடைய அறையிலேயே இருந்தான். அவளுடைய சக தோழிகளும் இதை கண்டு கொள்ளவில்லை.

அப்படி இருக்க அவன் சூசனை தன் அறைக்கு அழைத்தான். வித்தியாசமாக எதையும் சிந்திக்காமல் அவள் சென்றாள். அவன் நல்ல உணவும் தயார் செய்து காத்திருந்தான். சென்றாள். சாப்பிட்டு நேரம் போனதரியாமல் இருந்தனர். அவனது வலுக்கட்டயத்தினால் கொஞ்சம் மதுவும் அருந்தினாள். அவள் போதையில் மயங்கினாள். பின்னர் என்ன நடந்தது என்று அவளுக்கு நினைவில்லை. அன்று இரவு அவள் அங்கேயே உறங்கினாள். அவன் நினைத்தது எல்லாம் சாதித்துக் கொண்டான்.

சில நாட்கள் கடந்து போன பிறகு தான் அவளுக்கு தான் கர்ப்பம் ஆகி இருப்பது தெரிந்தது. அவளுக்கும் அவனுக்கும் தீராத பகையாகிப் போனது. அவனை அவள் மிகவும் வெறுத்தாள். அவனுக்கு பயந்து அவள் கல்லூரி படிப்பை நிறுத்தி சொந்த ஊருக்கு போக இரயில் ஏறினாள். யாரிடமும் ஒன்றும் பேசாமல் அறைக்குள்ளேயே கர்ப்பிணியாக அடைந்து கிடந்தாள்.

இது போல பல சம்பவங்கள் உண்டு. இப்படி மெட்ரோ நகரங்களில் நடப்பது மிகவும் சாதாரணமானதே. தங்கள் வாழ்வை சீரழித்துக் கொண்டு வாழ்கிற அநேகரை காணலாம். பணத்திற்காக தன சரீரத்தை விற்கிற பலர் உண்டு. தேவ பயம் இல்லாத சந்ததியின் கூட்டத்தில் இவர்களும் சேர்ந்து அழிந்து போகிறார்கள்.

ஒழுங்கும் கட்டுப்பாடுகளுடன் வளர்ந்து வந்த தலைமுறையினர், கூட்டில் இருந்து வெளியேறிய பறவையை போல சுதந்திரம் கிடைத்த போது என்ன செய்வதென்று அறியாமல் சந்தோஷத்தில் துள்ளுகிறார்கள். இங்கே கட்டுப்படுத்த யாருமில்லை. தங்கள் பெற்றோர்கள் மேல் அவர்களுக்கு எந்த மரியாதையும் இல்லை. பெற்றோர்கள் அனுப்பித்தருகிற பாக்கெட் மணிக்காக மட்டுமே பாசம் காட்டுகிறார்கள். படிப்பில் கவனம் செலுத்தி நல்ல எதிர்காலம் ஏற்படுத்திக் கொள்வதை விட்டு வாலிபத்தை தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கேய்யாருக்கு கெடுதல் வருகிறது? நன்கு கவனித்து வளர்த்தின பெற்றோர்களுக்கோ,கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கோ,அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையில் கண்டித்து நடத்தின சபைக்கோ? கேள்வி கேள்வியாகவே இருக்கும் போது பதில் சொல்லுவது யார்?

உபதேசம் விரும்பாத தலைமுறைகள் தான் இன்று இருக்கிறார்கள். உபதேசம் பண்ணுகிறவர்களை வெறுக்கிறார்கள். நல்ல பாடங்கள் சொல்லிக் கொடுத்தவர்களை அவர்கள் என்றோ மறந்து போனார்கள். வேத வசனம் வாசிப்பதே இல்லை. ஆராதனை கூட்டங்களுக்கு போனால் ஆச்சு!!

எதிர்பார்ப்போடு படிக்க அனுப்புகிற பெற்றோர்களை கொஞ்சம் சிந்தியுங்கள். நீங்கள் நினைப்பதல்ல நடப்பது. நீங்கள் உங்கள் சொப்பனத்தில் கூட காணாதது தான் நடக்கிறது. உங்கள் சந்ததிகளை நினைத்து ஜெபிக்கிறீர்களா? அவர்களை பற்றி விசாரிக்க உங்களுக்கு நேரம் இருக்கிறதா? என் பிள்ளை நல்ல பிள்ளை தான். ஒருபோதும் தவறமாட்டான் என்று சிந்திப்பீர்களானால் அது சரியல்ல. வேட்டையாடும் பருந்துகள் அவர்களை சுற்றிலும் இருக்கிறதென்பதை மறக்க வேண்டாம். ஜாக்கிரதை வேண்டும். உங்கள் சந்ததி கர்த்தருக்கு வேண்டும். தகர்ந்து போக வேண்டியவர்கள் அல்ல.

# ஜீவ வழி மிஷனெரி ஊழியங்கள்

அந்நாளிலே அநேகம் ஜாதிகள் கர்த்தரை சேர்ந்து என் ஜனமாவார்கள். (சக 2:11).

ஜீவ வழி வாசகர்களுக்கு மிஷன் தளங்களுக்குள் வரவேற்கிறோம். கடந்த நாட்களில் உங்களது ஜெபங்களும் உதவிகளும் பல விதங்களில் எங்களுக்கு மிகுந்த ஒத்தாசையாக இருந்தது. இந்த ஊழியத்தின் ஒரு பகுதியாக 2008 ம் ஆண்டு முதல் ராஜஸ்தான் மாநிலத்தில் ஆதிவாசிகள் மத்தியில் செய்து வருகிற ஊழியத்தை இம்மட்டிலும் செய்து வர கர்த்தர் உதவி செய்தார். சமூக சேவையின் மூலமாக அங்குள்ள சகோதரிகளுக்கு இலவசமாக தையல் பயிற்சியளிக்கவும், அதையும் இதுவரை செய்துவர கர்த்தர் உதவினார். ஆறு மாத கால பயிற்சி வகுப்பாக துவங்கி இன்று ஆறு பேட்ச்களில் 70 சகோதரிகள் கற்றுக்கொள்ளவும், அவர்களில் அநேகர் இயேசுவை தம் சொந்த இரட்சகராக ஏற்று கொள்ளவும் செய்தனர். கடந்த வருடம் கொரோனா வந்து விட்டதால் 7 வது பேட்ச் துவங்க இயலாமல் போயிற்று. இருப்பினும் தடைகளை தகர்த்து அடுத்த பேட்ச் ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த இலவச தையல் பயிற்சிக்கு கற்று கொள்ள அநேகர் விருப்பப்படுகிறார்கள். இதற்க்கான தங்களது ஊக்கமான ஜெபமும் ஆதரவும் தேவைப்படுகிறது.

மகாராஷ்ட்ராவில் தாணே, ராய்காட் மாவட்டங்களில் நடைபெற்று வருகிற நமது ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார். கர்த்தர் பாஸ்டர் தானியேல், பாஸ்டர் ராஜேஷ் மூலம் தம் ஊழியத்தை அந்த பகுதிகளில் நிறைவேற்றி வருகிறார்.ஜால்னா என்ற மாவட்டத்தில் ஒரு புதிய ஊழியத்தை துவங்க கர்த்தர் உதவி செய்த்திருக்கிறார். அங்கே பாஸ்டர் மெல்வின் பவார் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறார். தமிழ் நாட்டில் வேலூர் மாவட்டத்தில் பிராமனமங்கலத்தில் உள்ள ஊழியத்தையும் பாஸ்டர் ஜோன்சன் சகரியா மூலம் கர்த்தர் நடத்தி வருகிறார்.

## நமது இலக்கு

1. மகாராஷ்டிராவிலுள்ள 36 மாவட்டங்களிலும் குறைந்த பட்சம் ஒரு சபையாவது நிறுவுவது.

2. எழுத படிப்பறிவில்லாத இடங்களை தேர்வு செய்து அங்கு பள்ளிக் கூடங்கள் துவங்குவது.

3. இராஜஸ்தானிலுள்ள ஆதிவாசிகள் மத்தியில் செய்து வருகிற சமூக சேவை பணிகளை இன்னும் அதிகப்படுத்துவது.

4. பயிற்சியை சிறந்த முறையில் கற்று தேறுகிரவர்களில் இருவருக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்குவது.

5. ஒவ்வொரு பேட்ச்சின் முடிவிலும் அந்த பகுதியில் ஒரு சுவிசேஷ கூட்டம் நடத்துவது.

இது மட்டுமன்றி இன்னும் பல நன்மையான காரியங்களை செய்ய விரும்புகிறோம். கர்த்தர் இந்த ஊழியங்களை ஆசீர்வதிக்கவும், வளர செய்யவும், அநேகம் ஜாதிகள் கர்த்தரிடத்தில் சேரவும், தேவனுடைய ஜனமாகவும், கர்த்தர் அவர்கள் நடுவிலே வாசம் பண்ணவும், தேவ பிள்ளைகளாகிய உங்களது ஜெபத்தையும், ஆதரவு உதவிகளையும் கேட்டுக் கொள்கிறோம். கர்த்தர் உங்கள் எல்லாரையும் ஆசீர்வதிப்பாராக.

We Prayerfully Invite You & Your Family To Join Our Congregation

ASSEMBLIES OF GOD
ALL THE GOSPEL
AG

**LIVING WAY A. G. CHURCH**

14/1, SUNITA ESTATE, SHASTRI NAGAR, OPP. JAINAM HALL,
L.B.S. MARG, BHANDUP (W), MUMBAI - 400 078
MOB.: 93245 59533/98676 34153

**Worship Timings Every Sunday**

8.00 am to 09.30 am - Malayalam & Hindi
10.00 am to 11.30 pm - Tamil & Hindi
5.30 pm to 7.30 pm - Hindi & English

YouTube

www.thelivingway.in
YouTube : www.youtube.com/livingwayindia

கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி,
அவர்: நான் உன்னைத் தாயின் வயிற்றில்
உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ
கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான்
உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை
ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக்
கட்டளையிட்டேன் என்று சொன்னார்.
(எரேமியா : 1:4,5).

www.thelivingway.in

**PRINTED MATTER**
(Private Circulation only)

**To,**

*If Undelivered Please return to :*
**"JEEVA VAZHI"**
**Post Box : 17315, Bhandup (W), Mumbai - 400 078.**
**Maharashtra, INDIA**

**Edited & Published by : Pr. LIVINGSTON ZECHARIAH, on behalf of The Living Way Ministires, Mumbai - 400 078.**